கிடைக்கின்ற நேரத்தில் அதை நிறைவேற்றிக் கொடுப்பதாகவும் பதில் அளித்தார்கள். இப்பொழுது அந்தத் திட்டம் எந்த வகையில் நிறைவேற்றப்படவில்லை என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : திட்டம் இருக்கிறது. தற்பொழுது சாத்தியம் இல்லையென்று சொல்லப்பட்டிருக்கிறதே தவிர திட்டம் கைவிடப்பட்டதாக இல்லை.

பாலாறு-பொருந்தலாறு திட்டம்

* 212 *வினா.*—**திரு. கு. கிருஷ்ணமூர்த்தி :** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி வட்டத்தில் பாலாறு, பொருந்தலாறு திட்டம் எந்நிலையில் உள்ளது ?

(இ) அதைத் துரிதப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இத்திட்டத்திற்கான விவரங்கள் மத்திய நீர், மின்விசை குழுவிற்கு, ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளன.

(இ) மத்திய நீர் மின்விசைக் குழுவின் ஒப்புதல் கிடைத்ததும் இத்திட்டம் மேற்கொள்ளப்படும்.

திரு. கு. கிருஷ்ணமூர்த்தி : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்கு செலவு எவ்வளவு ஆகிறது ? இதனால் புதிதாக எவ்வளவு ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்று அறியலாமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இத்திட்டத்திற்கு 2.56 இலட்சம் ரூபாய் செலவிடப்படும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. தற்போது சுமார் 10,000 ஏக்கருக்கும் புதிதாக சுமார் 4,000 ஏக்கருக்கும் பாசன வசதி கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திருமலைநாயக்கர் மஹால்

* 213 *வினா.*—**திரு. கரு. சீமைச்சாமி :**
திரு. கே. விநாயகம் :
திரு. டி. மார்டின் :
திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மதுரை திருமலைநாயக்கர் மஹாலை புதுப்பிக்க செலவு செய்யப்பட்டதா ?

(இ) ஆம் என்றால், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) திருமலை நாயக்கர் மஹாலைப் புதுப்பிக்க 1966-67-ல் 3 லட்சம் ரூபாய் மதிப்பீட்டுச் செலவுத் தொகை அரசினால் அனுமதிக்கப்பட்டுள்ளது. இதுவரை ரூபாய் 1,020 செலவு செய்யப்பட்டுள்ளது.